## கீழக்கரை நகர்மன்ற 30.06.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள்: 1**

கீழக்கரை நகராட்சியில் தூய்மை பணியாளராகப் (Cleanliness Worker) பணிபுரிந்து வந்த திரு.கே. முத்து என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2020–ந் தேதி பிற்பகல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அன்னார் ஓய்வு பெறும் நாளில் ஈட்டிய விடுப்பு கணக்கில் (Earned Leave) 240 நாட்கள் (8 மாதங்கள்) இருப்பில் உள்ளது.

**240 நாட்கள் (8–மாதங்கள்) ஈட்டிய விடுப்பினை (Earned Leave) காசாக்கி வழங்கப்பட**

**வேண்டிய தொகை விவரம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சம்பளம் | – | 28,200 X 8 | = | 2,25,600/- |
| 2. | அகவிலைப்படி 17% | - | 4794 X 8 | = | 38,352/- |
| 3. | வீட்டு வாடகைப்படி | – | 1,500X 8 | = | 12,000/- |
| | | **மொத்தம்** | **34,494X 8** | = | **2,75,952/-** |

அன்னாருக்கு 240 நாட்கள் ஈட்டிய விடுப்பினை காசாக்கி ரூ. 2,75,952/- வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 242/ 2020/ சி1)**

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.746 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 2**

இந்நகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 25KVA ஜெனரேட்டர் 325 மணி நேரம் இயங்கி உள்ளதால் இராமநாதபுரம் Genearth Service நிறுவனம் மூலம் சர்வீஸ் செய்யப்பட்டது. அதற்கான கட்டணம் ரூ.5452/– மட்டும் வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

1) சர்வீஸ் செய்வதற்கான பொருட்களுக்குரிய பட்டியல் – ரூ.4283/–
(Invoice No. S420344062100066, Date 11.06.2020)

2) வேலைக்கான கூலி – ரூ.1003/–
(Invoice No. L420344062100032, Date 11.06.2020)

**மொத்தம் ரூ. 5,452/–**

மேற்காணும் விவரப்படியான பட்டியல் ரூ. 5,452/— ஐ இராமநாதபுரம் Genearth Service நிறுவனத்திற்கு வழங்குவதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.256/2020/இ1)**

**அலுவலக குறிப்பு**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ.5,452/— மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.747 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 3**

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமம் காட்டுப்பள்ளியில் தங்கியிருக்கும் கேரளா மற்றும் அனைத்து மாவட்டங்களை சேர்ந்த சுமார் 700க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கோவிட்—19 விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ள நிலையில், உணவின்றி தவித்து வருவதால் கீழக்கரை நகர் பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தினசரி உணவு கட்டணங்கள் செலுத்தி மேற்கண்ட நபர்களுக்கு உணவுகள் தயார் செய்து வழங்குமாறு கீழக்கரை, நிஷா பவுன்டேசன் 24.03.2020 மற்றும் 31.03.2020—ந் தேதிய விண்ணப்பம் மற்றும் இராமநாதபுரம் உதவி ஆட்சியர் அவர்களின் ந.க.அ9/1963/2020, நாள். 11.04.2020ந்தேதிய உத்திரவின்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் உணவுகள் தயார் செய்து வழங்குவதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி உள்ளூர் விலை விகிதத்தில் வாங்கி பயன்படுத்துமாறு, இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு. ஆர். சிவசங்கர் அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 01.05.2020 முதல் 31.05.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை வாங்கி கொடுத்த வகைக்கு ரூ.1,48,270/— மட்டும் வழங்க கோரியுள்ளார்.

| வ.எண். | நாள் | தயார் செய்த உணவு வகை | | காய்கறிகள் வாங்கிய அளவு கிலோ/கிராம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | இட்லி சாம்பார் | சாதம் | | |
| 1. | 01.05.2020 | 2400 | 1300 | 111.500 | 5125 |
| 2. | 02.05.2020 | 2400 | 1300 | 111.500 | 4645 |
| 3. | 03.05.2020 | 2400 | 1300 | 111.500 | 4365 |
| 4. | 04.05.2020 | 2400 | 1300 | 111.500 | 5115 |
| 5. | 05.05.2020 | 2400 | 1300 | 111.500 | 5350 |
| 6. | 06.05.2020 | 2400 | 1300 | 111.500 | 5585 |
| 7. | 07.05.2020 | 2400 | 1300 | 111.500 | 5620 |
| 8. | 08.05.2020 | 2400 | 1300 | 111.500 | 5085 |
| 9. | 09.05.2020 | 2400 | 1200 | 105.500 | 4305 |
| 10. | 10.05.2020 | 2400 | 1100 | 99.500 | 5020 |
| 11. | 11.05.2020 | 2400 | 1200 | 105.700 | 4875 |
| 12. | 12.05.2020 | 2400 | 1100 | 99.600 | 5055 |
| 13. | 13.05.2020 | 2400 | 1100 | 99.700 | 4445 |
| 14. | 14.05.2020 | 2400 | 1100 | 99.700 | 4930 |
| 15. | 15.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4320 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | 16.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4730 |
| 17. | 17.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4260 |
| 18. | 18.05.2020 | 2400 | 1100 | 99.500 | 5060 |
| 19. | 19.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4550 |
| 20. | 20.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4250 |
| 21. | 21.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4345 |
| 22. | 22.05.2020 | 2400 | 1100 | 99.500 | 5095 |
| 23. | 23.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4235 |
| 24. | 24.05.2020 | 2400 | 1100 | 99.100 | 4560 |
| 25. | 25.05.2020 | 250 | 800 | 80.500 | 4290 |
| 26. | 26.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4150 |
| 27. | 27.05.2020 | 2400 | 1100 | 99.500 | 4565 |
| 28. | 28.05.2020 | 2400 | 1300 | 111.500 | 5380 |
| 29. | 29.05.2020 | 2400 | 1300 | 111.500 | 4265 |
| 30. | 30.05.2020 | 2400 | 1300 | 111.500 | 5280 |
| 31. | 31.05.2020 | 2400 | 1300 | 111.600 | 5415 |
| **மொத்தம்** | | **72250** | **36400** | **3221.9** | **148270** |

மேற்காணும் விவரப்படியான தொகை ரூ.1,48,270/— மட்டும் இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. இந்நகராட்சி அம்மா உணவகத்தில் **01.05.2020** முதல் **31.05.2020** வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி வாங்கி கொடுத்த வகைக்கு அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு ரூ.1,48,270/— வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.748 அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்: 4</u>

கீழக்கரை நகராட்சியில் வசூல் செய்யப்பட்டு வரும் கட்டிட உரிமையாணை மற்றும் அனுமதி கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொண்டு உயர்வு செய்து நிர்ணயம் செய்யும் பணிகளானது நடவடிக்கையில் உள்ள நிலையில், மேற்கண்டவாறு கட்டணங்கள் உயர்வு செய்யப்படும் திருத்த அறிவிக்கையின்மீது பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற ஏதுவாக செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் இராமநாதபுரம் அலுவலகத்தின் மூலமாக தினசரி செய்தி தாளில் விளம்பரம் செய்யவும், அதன் தொடர் நடவடிக்கையாக இராமநாதபுரம் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.**1.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1537/2015/இ2)**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.749 அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்: 5</u>

கீழக்கரை நகர் பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கான உரிமையாணை கட்டணங்கள் மற்றும் அனுமதிகட்டணங்கள் இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.534 நாள்.22.04.2015ல் அனுமதிக்கப்பட்டதின்படி, 01.06.2015 முதல் தற்போது வரை வசூல் செய்யப்பட்டுவருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/2018/டிபி3 நாள்.05.03.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி, தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி எண்–4ல் கட்டிட அனுமதி காலம் 5–அண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீடிப்பு –3 ஆண்டுக்ள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் கட்டிட உரிமையாணை மற்றும் அனுமதி கட்டணங்களை மன்ற ஒப்புதலுடன் மாற்றியமைத்து விதிகளின்படி கட்டண விகிதங்களை நடைமுறைபடுத்தும் நடவடிக்கையாகவும், முன்னதாக கட்டிடங்களுக்கான உரிமையாணை கட்டணங்கள் மற்றும் அனுமதி கட்டணங்கள் நிர்ணயம் செய்து 30.06.2020ம் தேதியுடன் ஐந்து ஆண்டுகள் முடிவடையும் நிலையில் இருப்பதாலும், நகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு திருத்தம் செய்யப்பட்ட கட்டண விபரங்கள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>திருத்திய கட்டண விபரங்கள்</u>

| வ.எண் | தமிழ்நாடு நகராட்சிகளின் கட்டிட விதி மற்றும் பிரிவு | உமையாணை கோரும் விபரம் | தற்போதுள்ள கட்டணம் | 01.10.2020முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ள கட்டண விகிதம் | அளவு | ஊரிமையாணை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 175.176 | புதிதாக மனைப்பிரிவு செய்து சாலை அமைக்க. | 5000 | 1000 | ஒவ்வொரு 500ச.மீமற்றும்அதன் பாகத்திற்கு | 1 தடவை |
| 2 | 175,176 | மனை உட்பிரிவு செய்ய | 1000 | 250 | ஒவ்வொரு மனைக்கும் | 1 தடவை |
| 3 | 183(1) | தெருக்கள் பாதைகள் மீதுள்ள வராண்டா, பால்கனி சன்சைடு(படிக்கட்டுகள்,சாக்கடை மூடி) போன்ற கட்டுமான ஆக்கிரமிப்புகளுக்கு. | 100 | 150 | 1 ச.மீ | 1 வருடம் |
| 4 | 183(2) | தெருக்களில் போக்குவரத்து இடையூறு இன்றி பந்தல் தற்காலிக ஆக்கிரமிப்புகளுக்கு (கோவில் திருவிழா, ஈமச்சடஙகு, அரசியல் காரியங்கள் திருமணம் மற்றும் நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட மார்ச் முதல் மே முடிய வேணல் பந்தல்களுக்கு அனுமதி இலவசம்) | 100 | 150 | 1 ச.மீ | 1 வாரம் |
| 5 | 183(2) | நகராட்சி பெட்டிக்கடைகளை சுற்றி அமைக்கப்படும் தற்காலிக வரை அடைப்புகளுக்கு அனுமதி அளித்தல் மேற்படி இடங்களில் பெஞ்ச, மேஜை அனுமதித்தல் கதவு தெரு பக்கமாக திருக்ககூடியது. | 200 | 300 | 1 ச.மீ | 1 வருடம் |
| 6 | 183(2) | தெருக்களின் ஓரங்களில் போக்குவரத்திற்கு இடையூறின்றி கட்டிட சாமான்கள் கல், மண் மற்றும் அதன் இனங்கள் வைத்துக்கொள்ள குறைந்த பட்ச கட்டணம் | 100 | 150 | 1 ச.மீ | கட்டிட பணி முடியும் வரை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 183(3) | தெருக்களின் ஓரங்களையும் தெரு பகுதியையும் குத்தகை விடுதல் | 500 | 650 | 1 ச.மீ | 1 வருடம் |
| 8 | 197 | கட்டிட மனை அங்கிகாரம் செய்ய(மனையின் பரப்பு) 1ச.மீ | 300 | 500 | 200ச.மீவரை | 5 ஆண்டுகள் |
| 9 | 197 | கட்டிட மனை அங்கிகாரம் செய்ய(மனையின் பரப்பு) 1ச.மீ | – | 600 | 200 ச.மீக்கு மேல் | 5 ஆண்டுகள் |
| 10 | 199(a) | புதிதாக கட்டும் மாற்றியமைக்கும் தார்சு குடியிருப்பு கட்டிடத்திற்கு | | | | |
| | | 1) ஸ்டில்ட் தளம் | – | 200 | 10 ச.மீ | 5 ஆண்டுகள் |
| | | 1) தரைத்தள அனுமதி | 200 | 300 | 10 ச.மீ | 5 ஆண்டுகள் |
| | | 2)முதல்தள அனுமதி | 300 | 400 | 10 ச.மீ | 5 ஆண்டுகள் |
| | | 3) இரண்டாம் தள அனுமதிக்கு அதன் மேல் உள்ள கட்டிடத்திற்கு | 400 | 500 | 10 ச.மீ | 5 ஆண்டுகள் |
| 11 | 199(b) | குடியிருப்பு அல்லாத தொழிற்சாலை, கடை, அலுவலகம், பள்ளி கிடங்கு போன்ற அனைத்து வணிக கட்டிடங்களுக்கும் | | | | |
| | | 1) ஸ்டில்ட் தளம் | – | 400 | 10 ச.மீ | 5 ஆண்டுகள் |
| | | 1) தரைத்தள அனுமதி | 300 | 500 | 10 ச.மீ | 5 ஆண்டுகள் |
| | | 2)முதல்தள அனுமதி | 1000 | 1200 | 10 ச.மீ | 5 ஆண்டுகள் |
| | | 3) இரண்டாம் தள அனுமதிக்கு அதன் மேல் உள்ள கட்டிடத்திற்கு | 1200 | 1400 | 10 ச.மீ | 5 ஆண்டுகள் |
| 12 | 197(1) | பக்க எல்லை சுற்றுச்சுவர் கட்டுமானம் செய்ய | | | | |
| | | 2மீ முதல் 4மீ வரை உயரத்திற்கு உட்பட்டு | 100 | 150 | 1மீ நீளத்திற்கு | 5 ஆண்டுகள் |
| | | 4 மீ உயரத்திற்கு மேல் | 200 | 300 | 1மீ நீளத்திற்கு | 5 ஆண்டுகள் |
| 13 | 197(1) | சுவர் மராமத்து, தளம் பூசுதல், கூரை மராமத்து போன்ற மராமத்து பணிகள் செய்ய (கட்டுமான அமைப்பில் எவ்விதமான மாற்றம் செய்யாமல்) | 1000 | 1200 | –––– | 1 தடவை |
| 14 | 197(1) | மாடிப்படிகட்டு கட்டுமானம் செய்ய | 150 | 200 | 1 தளத்திற்கு | 5 ஆண்டுகள் |
| 15 | 197 | குளியலறை கட்டுமானம் செய்ய | 200 | 250 | 1 எண்ணம் | 5 ஆண்டுகள் |
| 16 | 197 | மல இருக்கை அமைப்பு | 200 | 250 | 1 எண்ணம் | 5 ஆண்டுகள் |
| 17 | 207 | கிணறு மற்றும் போர்வெல் அமைக்க | 600 | 800 | 1எண்ணம் | 5 ஆண்டுகள் |
| 18 | 217 | தற்காலிக கட்டுமானங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு அனுமதி பெற | 500 | 600 | 10 ச.மீ | 6 மாதம் |
| 19 | 199 | புதிதாக மாற்றியமைக்கப்படும் ஒரு சிமெண்ட் அட்டை போன்ற கூரை மாற்றியமைக்கும் பணி | 100 | 200 | 10ச.மீ | 1வருடம் |
| 20 | | கட்டிட விண்ணப்பம் கூராய்வு கட்டணம் | – | 500 | ஒருவிண்ணப்பத்திற்கு | 1தடவை |
| 21 | | திருப்பப்படும் விண்ணப்பங்கள் திருப்பி சமர்பபிக்க | – | 500 | ஒருவிண்ணப்பத்திற்கு | 1தடவை |
| 22 | | கட்டிட அனுமதி வரைபட நகல் சமர்பித்து ஒப்பம் பெற | 300 | 500 | நகல் ஒன்றுக்கு | 1 தடவை |
| 23 | | கட்டிட வரைவாளர் பதிவு கட்டணம் | 2000 | 5000 | ஒரு நபருக்கு | 5 ஆண்டுகள |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | | கட்டிட வரைவாளர் புதுப்பிததல் கட்டணம் | 1500 | 5000 | ஒரு நபருக்கு | 5 ஆண்டுகள் |
| 25 | | கேபிள் டிவி, வீடியோ லைப்ரரி மற்றும் நகராட்சியில் தடையின்மை சான்று பெறும் இனங்களுக்கு | 1500 | 2000 | ஒன்றிற்கு | 1தடவை |
| 26 | | முழுமைத்திட்ட பயன்பாடு குறித்த சான்று வழங்க | 1000 | 1500 | ஒருசர்வே எண்ணிற்கு | 1தடவை |
| 27 | பி.பி.ஆர் சட்டம் | பி.பி.ஆர் சட்டத்தின்படி அமைக்கப்படும் தற்காலிக பந்தல்களுக்கு் | 300 | 500 | 10 ச.மீ | 1தடவை |
| 28 | | பொருட்காட்சி மற்றும் விளையாட்டு அரங்கம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்க | – | 500 | 10ச.மீ | 1மாதம் மட்டும் |
| 29 | 183 | <u>சர்வே கட்டணம்</u> | | | | |
| | | 1) புலப்பட நகல் தயார் செய்ய | 500 | 600 | ஒருசர்வே எண்ணிற்கு | 1தடவை |
| | | 2) கூடுதல் புலப்பட நகல் 1 பிரதி | 250 | 300 | ஒருசர்வே எண்ணிற்கு | 1தடவை |
| | | 3) நிலப்பதிவேடு நகல் வழங்க | 250 | 300 | ஒருசர்வே எண்ணிற்கு | 1தடவை |
| | | 4) எப் லைன் குறிக்க | 300 | 400 | ஒருசர்வே எண்ணிற்கு | 1தடவை |
| | | 5) உட்பிரிவு கட்டணம் | 300 | 400 | ஒருசர்வே எண்ணிற்கு | 1தடவை |
| 30 | | **<u>விளம்பர கட்டணம்</u>** | | | | |
| | | 1) நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் பிரதான சாலைகள். | – | 300 | 1ச.மீ | ஆறு மாதத்திற்கு |
| | | 2)பிற சாலைகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் | 200 | 300 | 1ச.மீ | ஆறு மாதத்திற்கு |
| 31 | | தரை வாடகை நகராட்சி இடங்கள் மற்றும் சாலைகள் | 200 | 300 | 1ச.மீ | ஆறு மாதத்திற்கு |
| 32 | | விளம்பரம் செய்ய உரிமையாணை கட்டணம் | 500 | 2000 | ஒரு நபருக்கு | ஆறு மாதத்திற்கு |
| 33 | | நிலத்திற்கான அபிவிருத்தி கட்டணம் | – | 2 | 1 ச.மீ | 1தடவை |
| 34 | | கட்டிடம் அனுமதிக்கப்படும் இடத்திற்கான அபிவிருத்தி கட்டணம் குடியிருப்பு | – | 10 | 1 ச.மீ | 1தடவை |
| 35 | | கட்டிடம் அனுமதிக்கப்படும் இடத்திற்கான அபிவிருத்தி கட்டணம் வணிகம் மற்றும் பிற வகைகளுக்கு | – | 15 | 1 ச.மீ | 1தடவை |
| 36 | | முழமை திட்ட நில உபயோகம் மாற்றம் குறித்து விண்ணப்பங்களை மேலனுப்பி வைக்க கட்டணம் | – | 2000 | ஒரு விண்ணப்பத்திற்கு | 1தடவை |
| 37 | | அங்கிகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்க | – | 1500 | ஒரு நகலுக்கு | 1தடவை |
| 38 | | கட்டிட அனுமதி மேலமுறையீடு விண்ணப்பங்களை மேலனுப்பி வைக்க கட்டணம் | – | 200 | ஒரு விண்ணப்பத்திற்கு | 1தடவை |
| 39 | 250 | இயந்திரங்கள், மின்பொறிகள், நிலை நாட்டுவதற்கான கட்டணம் அ) வீட்டு உபயோகத்திற்கு | - | இலவசம் | – | – |
| | | ஆ) தொழில் உபயோகத்திற்கு | | | | |
| | | 5 H.P வரை | 1000 | 1100 | ஒரு எண்ணத்திற்கு | 1தடவை |
| | | 5 H.P முதல் 10H.P வரை | 1500 | 1600 | ஒரு எண்ணத்திற்கு | 1தடவை |
| | | 10 H.P முதல் 15 H.P வரை | 2000 | 2100 | ஒரு எண்ணத்திற்கு | 1தடவை |
| | | 15 H.P முதல் 20 H.P வரை | 2500 | 2600 | ஒரு எண்ணத்திற்கு | 1தடவை |
| | | 20 H.P முதல் 50 H.P வரை | 3000 | 3100 | ஒரு எண்ணத்திற்கு | 1தடவை |
| | | 50 H.P முதல் 100 H.P வரை | 3500 | 3600 | ஒரு எண்ணத்திற்கு | 1தடவை |
| 40 | | நன்னிலை வரி அரசு கணக்கு தலைப்பில் செலுத்த வேண்டும் | 300 | 300 | ஒரு இனத்திற்கு | 1தடவை |
| 41 | | தொழிலாளர் நல நிதி தொகை | 100 | 120 | 1 ச.மீ | 1 தடவை |

நிபந்தனை:-

1. ஐந்து ஆண்டுகள் கட்டிட உரிம காலத்திற்குள் கட்டிடம் பணி முடிக்கவில்லை எனில் புதுப்பிப்பு செய்ய கட்டிட உரிமையாணை கட்டணங்கள் முழுவதும் செலுத்தப்பட வேண்டும்.

2. அனுமதி பெறாமல் கட்டிட வேலை துவங்கி இருந்தால் உரிம கட்டணத்தில் 50 சதவீதம் கட்டணங்கள் கூடுதலாக செலுத்தப்பட வேண்டும்.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.திருத்திய கட்டண விகிதங்களை 01.10.2020 முதல் நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1537/2015/இ2)

**தீர்மானம் எண்.750 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 6**

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய இடங்களில் கழிவு நீரேற்றும் நிலையம் அமைந்துள்ளது. மேற்படி கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் இந்நகராட்சிக்கு பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. எனவே, பொது சுகாதார நலன் கருதி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்கள் மேற்படி பணிகளை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலன் கருதி மேற்படி பணிகளான கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.675 நாள்.30.12.2019–ன்படி, மதிப்பீடு ரூ.6,40,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, இப்பணிகள் 01.02.2020 முதல் 31.07.2020 வரை ஒப்பந்த அடிப்படையில் சிறப்பான முறையில் செய்யப்பட்டு வந்தது. மேற்படி ஒப்பந்த காலம் 31.07.2020–ந் தேதியுடன் நிறைவடைகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு, மேற்காணும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2019–20 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.8(b) Pump operator without ITI பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.520/– வீதம் கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்களை ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி அமர்த்திக்கொள்ள 01.08.2020 முதல் 31.01.2021 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.6,40,000/–க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் ஆறு நபர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி செய்யும் பொருட்டு அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. நகர் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.272/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கும் ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு ஆறு நபர்களை வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.6,40,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.751 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 7</u>**

கீழக்கரை நகராட்சிப் பகுதிகளில் குழல் விளக்குகள்—135, உயர்மின் கோபுரம் 9 எண்ணம் விளக்குகளில் பொருத்தப்பட்டுள்ள 108 விளக்குகள், சோடியம் விளக்குகள்—154, CFL விளக்குகள்—627, LED 25w விளக்குகள்—242 ஆக மொத்தம் 1266 எண்ணம் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. அவை இந்நகர் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. மேற்கண்ட தெரு விளக்குகளை பராமரிப்பதற்கு இந்நகராட்சிக்கு ஒரே ஒரு மின் பணியாளர் மற்றும் ஒரு மின்பணி உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீரேற்றம் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களையும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 3 எண்ணம் கழிவு நீரேற்றும் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை நல்ல முறையில் பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இந்த பணிகளை செய்வதற்கு இந்நகராட்சிக்கு பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால் இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி மின்பணியாளரின் உதவிக்கு கூடுதலாக ஒரு உதவியாளரைக் கொண்டு பணி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

ஆகவே, இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளான தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தீர்மான எண்.676 நாள்.30.12.2019—ன்படி மதிப்பீடு ரூ.87,000/—க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, இப்பணிகள் 01.02.2020 முதல் 31.07.2020 வரை ஒப்பந்த அடிப்படையில் சிறப்பான முறையில் செய்யப்பட்டு வந்தது. மேற்படி ஒப்பந்த காலம் 31.07.2020—ந் தேதியுடன் நிறைவடைகிறது.

நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு மேற்காணும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2020—21 ஆம் ஆண்டு பொதுப்பணித்துறை விலை விகித அட்டவணை வரிசை எண்.100 Electrical Helper for Maintenance of Street Light பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.497/— வீதம் நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட இந்நகராட்சி தெரு விளக்குகள் பராமரிப்பு பணிகளை ஒரு நபரைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி அமர்த்திக்கொள்ள ஆறு மாதங்களுக்கு 01.08.2020 முதல் 31.01.2021 வரை ரூ.1,01,000/—க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. நகர் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.261/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு தெரு விளக்குகளை பராமரிப்பு குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டார்கள் / ஆயில் என்ஜின்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி மின்பணியாளரின் உதவிக்கு கூடுதலாக ஒரு உதவியாளரைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு ஒரு நபர் வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.1,01,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.752 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 8</u>**

கீழக்கரை நகராட்சியில் ஒப்பந்தகாரராக பதிவு செய்ய வேண்டி கதவு எண். 11/36 தங்கப்பா நகர், மஹர் நோன்பு பொட்டல் ரோடு, இராமநாதபுரம் என்ற முகவரியில் உள்ள திரு. எஸ். சுரேஷ், த/பெ. எம். சுப்புராமு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின்படி, இந்நகராட்சி ஒப்பந்ததாரராக ரூ.75 இலட்சத்திற்கு மேல் பணிகள் எடுத்து செய்வதற்கும், முதல் நிலை வகுப்பில் (Class I) பதிவு செய்வதற்கும் இந்நகராட்சிப் பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் ஒப்பந்ததாரர் மூலம் இந்நகராட்சி சேவை மைய பற்றுச்சீட்டு எண்.133/K1/2/20-21/0000320 நாள்.12.06.2020—ன்படி பதிவு கட்டணம் ரூ. 1000 + ரூ.10000 செலுத்தப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 109/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.753 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 9</u>**

இந்நகராட்சி TN65 S4101 ஈப்பு வாகனம் குளிர் சாதனத்தில் (A/c) கம்பர்சர் காயில், கட் அவுட், ரிலே காயில் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்து தருமாறு இவ்வலுவலக ஓட்டுநரால் கோரப்பட்டுள்ளது. தற்போது கோவிட்—19 விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ளதாலும், கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்காணும் ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு உள்ளூர் விலைப்புள்ளி பெறுவதற்கு 22.06.2020—ந் தேதி இவ்வலுவலக பொறியாளர்களால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஈப்பு வாகனம் குளிர் சாதனம் (A/c) பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T.) சேர்த்து 29.06.2020—ந் தேதி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தகாரர் / நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | என்.எஸ். ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>202/3A பேராவூர் போஸ்ட்<br>தேவிப்பட்டினம் ரோடு<br>இராமநாதபுரம். | ரூ.32,642/–<br>(CGST & SGST உட்பட) |
| 2 | ஸ்ரீ விக்னேஷ் என்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>மஹர் நோன்பு திடல் அருகில்<br>கேணிக்கரை, தேவிப்பட்டினம் ரோடு<br>இராமநாதபுரம். | ரூ.36,267/–<br>(CGST & SGST உட்பட) |
| 3 | ஏ.ஆர். என்ஜினியரிங் ஒர்க்ஸ்,<br>16/7C ஏ.கே.எஸ். காம்ப்ளக்ஸ்,<br>பி.1 போலிஸ் ஸ்டேசன் அருகில்,<br>ஜி.ஹெச். ரோடு,<br>இராமநாதபுரம். | ரூ.38,706/–<br>(CGST & SGST உட்பட) |

**(கோப்பு எண். 293/2020/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஈப்பு வாகனம் பழுது நீக்கம் செய்வதற்கு ரூ.32,642/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள என்.எஸ்.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.32,642/–ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.754 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**